# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S.25/2020

## CNR.No.TNCB19000

Date: 09.02.2026 PW2

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | மாவழகன் | **வயது** | 54 |
| **த/பெ** | கோபால்சாமி | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | வெள்ளிக்குப்பம்பாளையம் | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 9th February 2026

வா.சா.2 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை . வாதி வீராச்சாமி எனது நண்பர் என்பதால் அவருக்காக சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்றால் வாதியும் பிரதிவாதியும் இருவரும் நண்பர்கள் . வாதிதான் இன்று சாட்சி சொல்ல என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான். வாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் துணி வியாபாரம் செய்கிறார் . வாதி பைனானஸ் தொழிலும் செய்து வருகிறார் என்றால் சரிதான். இந்த வழக்கை தவிர வேறு 2, 3 வழக்குகள் வாதி இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

பொதுவாக பைனான்ஸ் தொழில் செய்பவர்கள் எங்கெங்கு ரேகை வைக்க வாங்க வேண்டும் என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான் . வாதி தாக்கல் செய்துள்ள வேறு ஒரு வழக்கில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் கடன் வாங்கி கொடுக்கும் எல்லோரிடமும் கமிசன் வாங்கிக் கொள்வேன் என்றால் பிரியப்பட்டு கொடுத்தால் வாங்கிக்கொள்வேன் . நான் வாங்கிக் கொடுத்த இரண்டு பேரிடமும் கமிசன் வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த கமிசன் வாங்கியதால்தான் அவருக்காக சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

வாதி வீராசாமிக்கு கந்து வட்டிதான் தொழில் அதற்கு ஆதரவாக நான் சாட்சி சொல்கிறேன் என்றும் பிரதிவாதிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து அல்ல என்றும் அதனால் என் மீதும் வாதியின் மீதும் கந்துவட்டி சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறார் என்றால் சரியல்ல . பிரதிவாதி அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்றவர் என்பதால் அவருக்கு கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல . நானும் வாதியும் சேர்ந்து கடனுறுதி சீட்டை போலியாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல . அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

மேட்டுப்பாளையம்.

சாட்சியின் கையொப்பம்